பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
07 03 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டு மக்களுக்கு தரமான மருந்துகளை குறைவான விலையில் வழங்குவது என்ற அரசின் உறுதிப்பாட்டை மக்கள் மருந்தக தினம் வெளிப்படுத்துவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- 2027-ஆம் ஆண்டுக்குள் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- சென்னையில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள உயர்தர மின் மேலாண்மை கருவிகள் உற்பத்தி மையத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.
- மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கின் முக்கிய குற்றவாளியான தகவூர் ராணா தம்மை நாடு கடத்துவதற்கு தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்த மனுவை அமெரிக்க உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமரின் மக்கள் மருந்தக தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்த மக்கள் மருந்தகங்களில் தரமான மருந்துகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்நாளையொட்டி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், நாட்டு மக்களுக்கு தரமான மருந்துகளை குறைவான விலையில் வழங்குவது என்ற அரசின் உறுதிப்பாட்டை மக்கள் மருந்தக தினம் வெளிப்படுத்துவதாக கூறியுள்ளார்.

ஆரோக்கியமான மற்றும் கட்டுடல் இந்தியாவை உருவாக்குவதையும் இத்திட்டம் உறுதி செய்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தரமான மருந்துகள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கிடைப்பதை சுட்டிக்காட்டியுள்ள திரு நரேந்திரமோடி, நாட்டு மக்களுக்கு இந்த மருந்தகங்கள் சேமிப்பை ஏற்படுத்தி இருப்பதுடன், உலக நாடுகளுக்கு முன் மாதிரியாக திகழ்கிறது என்றும் கூறியுள்ளார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இந்நாளையொட்டி வெளியிட்டுள்ள காணொலி பதிவில், பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வையால் உருவாக்கப்பட்ட பிரதமரின் மக்கள் மருந்தக திட்டம், நாட்டு மக்கள் அனைவருக்கும் தரமான மருந்துகளை மிகக்குறைந்த விலையில் கிடைப்பதை உறுதி செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.,

இந்த திட்டம் நாட்டின் சுகாதார சேவையில் மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

50 சதவீதத்திற்கும் குறைவான விலையில் மருந்துகள் கிடைப்பதன் மூலம் தினந்தோறும் லட்சக்கணக்கான மக்கள் பயனடைந்து வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளர்.

மக்கள் மருந்தக தினத்தையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், நாடு முழுவதும் இயங்கி வரும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் மூலம் தரமான மருந்துகள் 50 முதல் 90 சதவீதம் குறைவான விலையில் மக்களுக்குக் கிடைப்பதாக கூறியுள்ளார்.

இந்த திட்டம் ஆரோக்கியமான சுயசார்பு இந்தியாவை உருவாக்க அதிகாரம் அளிப்பதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள லட்சக்கணக்கான மக்களின் சுகாதார சேவையில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ள இந்த திட்டத்தை செயல்படுத்தியதற்காக பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

இந்த மக்கள் மருந்தகங்கள் தங்களது மருத்துவ செலவை பெருமளவு குறைத்திருப்பதாக தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பயனாளிகள் ) --- 47 செகண்ட்*

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடியின் தலைமையின் கீழ் 2027-ஆம் ஆண்டுக்குள் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்தில் மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் 56-வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் இன்று பங்கேற்று பேசிய அவர், நாட்டில் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய அமைப்புகளை பாதுகாப்பதில் மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் பங்களிப்பு மகத்தானது என்றார்.

நாட்டின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிப்பதாகக் குறிப்பிட்ட அவர், மன்னர் ராஜாதித்ய சோழனை போற்றும் வகையில் தக்கோலத்தில் உள்ள தொழிலக பாதுகாப்புப் படையின் மண்டல பயிற்சி மையத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்த படைப்பிரிவில் அதிநவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொழிலக பாதுகாப்புப் படையில் பெண்களுக்கென 124 முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய ஆயுத காவல்படைகளுக்கான ஆட்சேர்ப்பு தேர்வு தமிழ் உள்ளிட்ட மொழிகளில் நடத்தப்பட்டு வருவதகாவும் அவர் கூறினார்.

தமிழகத்தில் மருத்துவ படிப்புகளை தமிழ் மொழியில் வழங்கும்படி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தியும்கூட, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் திரு அமித்ஷா குற்றம்சாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் குஜராத் மற்றும் மேற்குவங்க மாநிலங்களிலிருந்து மத்திய தொழில் பாதுகாப்புப்படை வீரர்கள் பங்கேற்கும் சைக்கிள் பேரணியையும் திரு அமித்ஷா காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

கடலோர மாநிலங்களில் மேற்கொள்ளப்படும் இந்த சைக்கிள் பயணம் இம்மாத இறுதியில் கன்னியாகுமரியில் நிறைவடையவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் மற்றும் தொழிலக பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், அயர்லாந்து அதிபர் திரு **Michael D. Higgins** -ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இது குறித்து திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வின் வாழ்த்துச் செய்தியை அயர்லாந்து அதிபரிடம் தெரிவித்ததாக கூறியுள்ளார்.

இந்தியா – அயர்லாந்து இடையேயான உறவை வலுப்படுத்துவதில் கலாச்சாரத்தின் பங்களிப்பு குறித்தும் அயர்லாந்து அதிபருடன் விவாதித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்த அயர்லாந்து தலைவர்கள் ஆதரவு தெரிவித்ததாகவும் திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக அவர் டப்ளின் நகரில் உள்ள அஞ்சலக அருங்காட்சியகம் மற்றும் ட்ரினிட்டி கல்லூரி வளாகத்தில் உள்ள பழமையான நூலகத்தையும் பார்வையிட்டார்.

**[]<<<>>>[]**

பார்படாஸ் நாட்டின் உயரிய விருது தமக்கு வழங்கப்பட்டுள்ளதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி அந்நாட்டு அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தமக்கு வழங்கப்பட்ட இந்த உயரிய விருதை 140 கோடி மக்களுக்கும் அர்ப்பணிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக பார்படாஸ் நாட்டின் பிரிட்ஜ் டவுண் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு பபித்ரா மார்க்கெரிட்டா கலந்து கொண்டு பிரதமருக்கான விருதை பெற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சென்னை சோழிங்கநல்லூரில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள உயர்தர மின் மேலாண்மை கருவிகள் உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் போரூரில் சுமார் 39 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் எம் எஸ் சுவாமிநாதன் ஈர பசுமை பூங்கா, மேம்படுத்தப்பட்ட கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியையும் அவர் திறந்து வைத்தார்.

70 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

சென்னை பெருநகர காவல்துறையில் காவல் உதவி க்யூ ஆர் குறியீட்டுடன் கூடிய ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகைக் கார்கள் சேவையையும் அவர் திரு மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

கர்நாடகாவின் மைசூரில் உள்ள ஆகாஷவாணி நிலையம் இன்று தனது 90-வது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது.

இதையொட்டி பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மைசூர் வானொலி நிலைய வளாகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆகாஷவாணியின் தலைமை இயக்குநர் டாக்டர் ப்ரக்யா பாலிவால் கௌர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

**Nudi naada sangama** எனும் கலாச்சார நிகழ்ச்சியை அவர் தொடங்கி வைத்தார்.

இந்நாளையொட்டி மாணவர்களுக்கான கலாச்சாரப் போட்டிகள், சைக்கிள் பயணம், கிராமப்புற கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மும்பை தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான தகவூர் ராணா தம்மை இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கு தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்த மனுவை அமெரிக்க உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக தற்போது லாஸ் ஏஞ்சல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தகவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திரமோடி கடந்த மாதம் அமெரிக்கா சென்றபோது அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் இந்த தகவலை தெரிவித்திருந்தார்.

**[]<<<>>>[]**

பாலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் கட்டுமான தொழிலில் ஈடுபட்டிருந்தபோது மாயமான இந்திய தொழிலாளர்கள் பத்து பேரை இஸ்ரேல் படையினர் மீட்டுள்ளதாக அந்நாட்டுக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த தொழிலாளர்கள் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பிடித்து வைக்கப்பட்டிருந்த இடத்தை இஸ்ரேல் அதிகாரிகள் கண்டுபிடித்து இஸ்ரேலுக்கு அழைத்து வந்ததாகவும் இந்திய தூதுரகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் தில்லி அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி லக்னோவில் இரவு மணி 7-30 மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல்  கால்பந்து போட்டியின் இன்றைய ஆட்டத்தில் கேரளா — மும்பையை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**